- We are called to grow out of vocal prayer, to move on to mental prayer, contemplation and become mystics.

Lord, I long with all my heart to "finish my course well" and with deep and deepening joy and peace. Praised be your holy name for ever and ever.

**Sr. Puspam**

## மிருசுவில் குழுவில் எனது பணிகள்

2005ம் ஆண்டு உடுவில் குழுவிலிருந்து மிருசுவில் குழுவிற்கு வந்தேன். 2004 ம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்டு பெற்றோர் உறவினரை இழந்த நிலையில் 60 பிள்ளைகள் இவ் இல்லத்திற்கு வந்திருந்தனர். குழுத்தலைவி ஈவோன், மற்றும் ஏனைய சகோதரிகளும் பங்குத்தந்தையும் என்னை அன்புடன் வரவேற்றனர்.

இந் நாட்களில் எனது சிறப்புப் பணிகளாக:

பல உறவுகள், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு அன்பு, பரிவு, இரக்கம் காட்டி அவர்களுக்கு ஆறுதலாக இருந்ததுடன் அவர்களுக்கு பாடங்களும் கற்பித்தேன். மக்களுடன் இணைந்து இறைவார்த்தைப் பகிர்தல், செபமாலை சொல்லல், நற்கருணைச் சந்திப்பு மூலம் ஆன்மீகத்தை வளர்க்க முடிந்தது. ஆலயத்தில் மறைக்கல்வி கற்பித்தல், அருட்சாதனங்களுக்கு ஆயத்தப்படுத்துதல் போன்றவற்றிலும் ஈடுபட்டேன். வீடுகள் சந்தித்து சுனாமியால் போரினால் ஏற்பட்ட இழப்புக்களினால் உள வேதனைகளை அனுபவித்த மக்களோடு உரையாடி நோயாளர், முதியோருக்கு நற்கருணை வழங்கினேன்.

2006ல் ஏற்பட்ட போரின் இடப்பெயர்வுகளில் எம்முடன் இருந்த பிள்ளைகளை பாதுகாப்பாக வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டு ஒன்றரை மாதமாக இறைதந்தையின் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து அருட்சகோதரி ஈவோனும் நானும் அவ்விடத்தினில் பாதுகாப்பாக இருந்தோம். போர்ச் சத்தங்கள் மத்தியிலும் அருட்தந்தை பொனிபஸ் அவர்களுடன் இணைந்து திருப்பலி, செபமாலை போன்றவற்றில் ஈடுபட்டு இறைபராமரிப்பை ஆழமாக அனுபவித்தோம்.

என் அருள் உனக்குப் போதும் உன் வலுவின்னையில் என் வல்லமை வெளிப்படும். எனும் இறைவார்த்தை என் இயலாமையில் என்னை வழிநடத்தியது.

**அருட்சகோதரி. லூயிஸ்மேரி**

## The little fish in the Indian Ocean

Once there was a fish. The fish was about to hatch the eggs and give birth. In the course of time a little fish came into being. It was a new experience for the baby fish to be in the vast ocean. The atmosphere, coolness of the water, and the other creatures, all these things seemed to be new for this little fish. So did I when I went to India for my sister formation as well as a renewal of pirituality . The place that is most considered as a place of integrity and a sweet home away from home, a place of silence and solitude.

There were various kinds of fears, inhibitions, and a problem of adjustment, with new life and time table. The small little fish did not know to enjoy the cool water, to be in the present moment. She did not know to swim and scale the depth of the ocean. But the spirituality of Dhyanavana ocean took her into her bosom, and gave her chance to improve her spiritual life and to have a deep communion with a person of Jesus and oneself. It strengthened the religious vocation.

The thrilling experience for this little fish was to see other baby fish from nearly 14 congregations. She was very happy to live with hem, relate with them and love them. All the little fish accepted one another with their similarities and differences.

The little fish was very eager and longing to gather all the knowledge and wisdom about God, scripture, mission and to develop her whole personality in order to have deeper understanding and evoke authentic commitment to evangelical discipleship.

The ocean prepared her effectively, for eventual administrative, formative and for pastoral ministry. By this the little fish had grown in maturity. But her wings were still fragile and delicate, the confidence to swim freely in other areas were lacking. So the ocean gave her good opportunity to search within, her hidden talents and make use of it for the good of others.

By this time the little fish had grown strong, confident and loving. The sweet experience of Indian ocean was very unique and unforgettable. Now the little fish was ready to take a deep jump into the sea, to live a Religious life and accomphish the mission of Jesus.

**Sr. Mary Amali Figurado**

# எங்கள் பசுமையான நினைவுகள்

2015.07.01 அன்று மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயத்தில் மன்னார் மாவட்டத்திலுள்ள நான்கு விடுதிச்சாலை ஆகிய மன்னார், பறப்பாங்கண்டல், வங்காலை, நானாட்டான், விடுதிச்சாலை மாணவிகளுக்கான கருத்தமர்வு ஒன்று, மேற்குறிப்பிட்ட நான்கு விடுதிச்சாலைக்கும் பொறுப்பாக இருக்கும் Sr.யூஜின், Sr.எலிசபெத், Sr.ஜெயந்தி , Sr.அனீட்டா போன்ற அருட்சகோதரிகளின் தலைமையில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது.



இவ் கருத்தமர்வில் வன்முறையற்ற தொடர்பாடல் (NVC) எனும் கருப் பொருளு டன் சில கருத் துக்கள் எங்க ளுக்கு வழங்கப் பட்டது.

இவ் கருத்தமர்வின் மூலம் நாம் ஒரு வர் ஒருவருடன் வன்முறையற்ற நிலையில் ஒற்று மையாக எவ்வாறு கருத் துக்களை பரி மாறிக் கொள்வது என்றும், பிறருடைய கருத்துக்களுக்கு நாங்கள், மதிப்பளிக்க வேண்டும் என்றும் என் உணர்வுகளுக்கு நானே மூலகாரணம் என்றும், நாம் எவ்வாறு எம் வாழ்வில் முடிவுகளை எடுக்கலாம் என்றும் வளவாளர் Mr.ஜோன்சன் அவர்களால் சில விழிப்புணர்வுகள் எமக்கு கொடுக்கப்பட்டது.

அச்சிறிய நேரத்திற்குள் ஒருவர் ஒருவரை எந்த அளவிற்கு அறிந்து கொண்டிருக்கின்றோம் என்பதைக் கண்டு கொள்வதற்காக அருட்சகோதரி எலிசபெத்மலர் ஒருவரை எழுப்பி இச்சிறிது நேரத்திற்குள் நீங்கள் தெரிந்து கொண்ட பத்து மாணவிகளின் பெயரை சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். அது எங்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

ஒவ்வொரு விடுதிச்சாலை மாணவிகளால் மதிய உணவும், சிற்றுண்டிகளும், கொண்டு வந்து ஒருவர் ஒருவருடன் பரிமாறி உண்டு மிகவும் சந்தோசமாக அந்நேரத்தை நாங்கள் செலவு செய்தோம். அதை தொடர்ந்து மாணவிகளால் தரமான கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. அவ்வேளையில் மாணவிகள் தங்கள் திறமைகளையும் ஆற்றல்களையும் உற்சாகத்தோடு வெளிப்படுத்தியதோடு எங்கள் உறவுகளை மேலும் தொடர்வதற்கும் இந் நிகழ்வுகள், உரையாடல்கள் என்பன மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

இந்நிகழ்வுகளின் முடிவாக நாம் தாழ்வுபாடு கடற்கரைக்கு சென்று சந்தோசமாக அம்மாலை வேளையை இதமான கடற்கரை காட்சியில் மகிழ்ந்து நிறைவு செய்தோம்.

எங்களை இக்கருத்தமர்வுக்கு அழைத்துச் சென்று எங்கள் உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு பல வகைகளில் உதவி செய்த விடுதிச்சாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள அருட்சகோதரிகளான எலிசபெத்மலர், ஜெயந்தி, யூஜின், அனீட்டா அவர்களுக்கு மாணவிகள் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

**நானாட்டான் விடுதிச்சாலை மாணவிகள்.**

# Growing Gracefully Into the Golden Years of Life

A culture that promotes youthfulness, assertiveness, aggressiveness, competition, consumerism, materialism, production, business, individualism and secularism has no regard for the old and the ageing-not even for parents. This attitude is creeping in even into our culture. Even those who take care of those elderly physically and medically have failed to take care of the elderly holistically and more and more specifically spiritually as if the old have no spiritual or psychological needs.

When is old age is old age? Does culture determine it? Is it the physical decline with years? Is it the mental slowing down? If we go by ERIKSONIAN development stages, old age is marked anywhere between 60 – 65 and beyond. "What is certain" writes Albert Jewell is that ageing is a process which has cumulative effect at all levels of our being and which has cumulative effect at all levels of our being and which leads inexorably towards death. Once we reach 60 or 65, it is good time to begin to reflect on integrating our lives, if we had not done so yet, so that we can embrace death because we have embraced life. If I have a reason to die, then I have a reason to live. It is true the other way as well. Preparing for death is not negative, is not pessimism it is not melancholic, it is not giving up on life. On the contrary, we are beginning to feel it is trying to live the remaining years as fully as possible. As Jesus said "so that they have life and have it to the full". (Jn10:10)

## Late Adulthood (65-80)

**Integrity**

A person lives with what she/he has built over her/his life time. Let us look at our story – the years lived so far. No matter what may have happened in this history of ours, it is sacred. What I have lived and what all that have happened, cannot be changed. That is history, recorded facts. This is our history. There is nothing

we can do now to change any of those, but we can learn to accept them as they are and change the spell of those events on us today. That is indeed good news. In fact, it is the liberative news. Integrity involves an acceptance of the limitations of life, a sense of being a part of a larger history that includes previous generations, a sense of owning the wisdom of the ages and a final integrative of all the previous stages.

**Healing of Memories**

Our painful memories often lie just below a thin layer of forgetfulness, a small event can rip away this layer and we feel bruised, hurt and bewildered. Wounds heal from their innermost depth towards their surface. If the wound was covered over too quickly, it may fester and fill with pus and cause lot of pain and even disaster and be the cause for some psychosomatic illness. e.g: gastro – intestinal disturbances, aches and pains in the body. We may have taken revenge on others, betrayed others, hurt others, pained others and rejected others. God has given us this time to heal our lives.

**The Process of Healing**

I. Recall the memory
II. Relive the memory
III. Express the feeling that you had originally
IV. Express the feeling that you have now
V. Be open and allow yourself to be healed
VI. Let go of the pain (hurt, fear) and feel free

**Reconciliation**

Seeking reconciliation becomes another high priority. Peace with oneself, peace with others, peace with the environment, peace with the universe and peace with God. The need to become reconciled with others and to find healing of painful memories is a legitimate and urgent focus of spirituality of the elderly. This is also needed as part of our integration and integrity. Without experiencing peace within ourselves, we may not be in a place to talk peace with others. If we do, it will be incongruent and superficial.

**Attitude of Gratitude**

As we go down the memory lane, we cannot count the blessings we have received; so numerous. Sometimes we are overwhelmed by the blessings. Every day as we awake up, we have to thank the Lord, for the gift of life. After communion at the Eucharistic celebration, we have to thank the Lord for the gift of years, grateful for our parents and their contribution for my life especially laying a strong foundation and for giving a stable structure to grow, for our formators and teachers, grateful for our friends and the significant people in our life, grateful even for the crises in life because we came out of those crises and did grow as persons.

***Sr.Petonila***



# God's design

I had an opportunity to visit one of our convents named 'ozanam' at Sathurukondan in Batticaloa where differently abled persons are looked after by our Sisters.

Out of the 20 children, the condition of one particular child whose name was Raji pained when I observed her.

She doesn't enjoy the beauty of God's creation, doesn't express her likes or dislikes or say anything about what is happening around her. She can not hear at all, and suffers from brain damage too.

During my stay there, I was able to get more information about Raji. She was deserted by her parents, in vakarai area, 70km away from Batticaloa District. She was found by the roadside by local residents and was handed over to the hospital. She was just 2 ½ years old. She was sent to our home by the probation officer under the Social Service Department. This poor child doesn't know her parents' name or where she is from. Even doesn't know her date of birth.

She is loved very much by our staff and the other inmates.
The staff spokes woman said that at the beginning they came across some difficulties in caring for this child. They could not control her. She was boisterous, she cried and could not express her feelings. They tried their best to bring her up as a person or human being.

But, everything was in vain. She was sent for various treatments, wherever possible. After all the check ups, doctors asked the home not to bring her to hospital any more. All her internal parts were damaged. No more treatment was possible.

She is able to recognize the people with smell and touching. Living with a disability, now she has improved in her behavior and is happy in the loving and caring environment at the convent. After I came to know her back ground. I felt very sorry for her. She was abandoned by her own parents. She was found by residents and finally handed over and placed in this environment.

I was disturbed and I pondered within me, "Why God allowed such a child to suffer….?" Finally, I realized that Jesus said, "Whatever you do to the least of these brothers and sisters, you do it for me". So now very often I meditate on this and I made up my mind to love and accept them for God's greater glory.

**Sr. Shoba**

# துணை அங்கத்தினருக்கான சுற்றுலா


ஆனித்திங்கள் 20ம் நாள் வங்காலை, அரிப்பு, நானாட்டான் ஆகிய பங்குகளில் உள்ள துணை அங்கத்தினர் 27 பேர் ஊக்குவிப்பாளர் 3 பேர் என ஒரு நாள் சுற்றுலாவிற்காக ஆயத்தமானோம். எமது பயணம் வெறும் சுற்றுலா மட்டுமல்ல, ஆன்மீக புதுப்பித்ததலாகவும், எமது ஸ்தாபகரின் மனப்போக்கை, சகோதரிகளில் ஆழப்படுத்துவதாகவும் அமைந்திடவேண்டுமென ஆசித்தோம்.

காலை 8.30 மணிக்கு செபத்துடன் ஆரம்பமாகி கீதங்களுடன் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தை காலை 11 மணிக்கு அடைந்தோம். அது பங்களாவோ தங்கு மடமோ அல்ல, அடர்ந்த காடு உயர்ந்து ஓங்கி வளர்ந்த மரங்கள் அகன்ற கொப்புகள் பரப்பி எமக்கு நல்ல இல்லிடமாக அமைந்தது. மரநிழலில் அமர்ந்து இளைப்பாறினோம். இயற்கையின் அழகிய காட்சிகளை சுவைத்தவர்களாக சிறிது நேரம் செபித்தோம். அங்கத்தினர் தம் உணர்வுகளை வெளிப்படுத்தினர். நல்ல பிதாவின் கனவு நனவாகிறது போல, பல குழுக்கள் தம்மிடையே வேறுபாடின்றி, ஒருவர் மற்றவருடன் இணைந்து இருப்பது. மரங்களின் கிளைகள் பெரிதாக வளர்ந்து ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து மக்களுக்கும், பறவைகள், மிருகங்கள், வாகனங்கள் யாவற்றுக்கும் அடைக்கலம் தரும் அழகிய வனப்பாக இருந்தது. அமைதியான சோலை, ஆறு பாய்ந்த படியே ஓடிக்கொண்டிருந்தது. யாவரும் ஒரே தந்தையின் மக்கள், ஒரே ஆன்மீகம், ஐக்கியம் வாழப்பட வேண்டும். என்ற நல்ல பண்புகள் வெளிப்பட்டன. தாக சாந்தி ஏற்பட்டதும் சீடர்கள் 5அப்பத்தையும் 2மீனையும் பங்கிட்டது போல சகோதரிகளும் இருப்பதை மனமகிழ்வுடன் பகிர்ந்து கொண்டனர் இன்னமும் பார்க்க வேண்டிய குஞ்சுக்குள தொங்கு பாலம் சிலருக்கு உந்தித் தள்ளியது. எனவே மீண்டும் எமது பயணத்தை தொடர்ந்தோம். முதலில் தொங்குபாலம் பார்ப்பதற்கு பயமாக இருந்தாலும் ஒவ்வொருவரும் வயது வேறுபாடின்றி பாலத்தில் ஏறி மகிழ்ந்தனர். ஒரு சிலர் மட்டும் பயத்தினால் ஏறவில்லை. அதன்பின்னர் மீண்டும் பயணம் செட்டிகுளத்திற்கு அருகாமையில் இருக்கும் பெரிய தேக்கம் சென்றோம். வந்தவர்களில் யாருக்கும் அந்த இடம் தெரியாது. ஆனால் குறிப்பின்படி ஒருவாறு பஸ் சாரதி

வாகனத்தை கஸ்ரப்பட்டு இடத்திற்கு கிட்டவாக கொண்டுவந்தார். இனி நடந்து யாவரும் தேக்கத்தை நோக்கினோம். முதல் பார்த்ததை விட பெரிய தேக்கமும் அணைக்கட்டும் மரங்களும் இருந்தன. எல்லோரும் 50 கடந்தவர்கள் ஒரு வித்தியாசமும் பாராது உட்காருவதற்கேற்ற இடங்களைப் பிடித்தனர். பசியும் வயிற்றைக் கிள்ளவே, தமது உணவுப் பொதிகளை அவிழ்த்து சாப்பிட ஆயத்தமானோம். அந்நேரம் அருட்தந்தை அருட்பிரகாசமும் தேடிப்பிடித்து வந்துவிட்டார். அவரும் அர்ப்பணம் செய்து எம் குடும்பத்துடன் இணைந்துள்ளார். உரிமையோடு எம்முடன் கலந்து மதிய உணவையும் முடித்துக்கொண்டு தமது வார்த்தைப் பகிர்வை ஆரம்பித்தார்கள்.







எமது சுற்றுலா ஒன்று கூடலின் முக்கிய நோக்கம் இதுவாகவே இருந்ததால் அவரும் தனது இறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள, ஒவ்வொருவரும் சுததந்திரமாக பேசத்தொடங்கினர். அன்றைய நாளின் நற்செய்தி எதற்கும் கவலைப்படாது இறைவனில் நம்பிக்கை என்பதை அழுத்திக் கூறினார். வந்தவர்கள் யாவரும் சந்தோசமாக இந்த நாள் கழிந்ததையிட்டு மன மகிழ்ந்தனர். ஆங்கிலம் கற்பதன் அவசியத்தையும் அவர்களுக்கு சகோதரி மெற்றில்டா சுவாரசியமாக எடுத்துரைக்க சில வசனங்களை அவர்களும் பேசி மகிழ்ந்தனர். இவ்விதமாக குருவானவரின் ஆசீர்வாதமும், ஊக்குவிப்பாளரின் முயற்சிகளும், அடுத்து எப்போ ஒன்றுகூடல் என்ற ஆர்வத்தை தட்டி எழுப்பியது. எல்லாம் இறைவனின் மகிமைக்கே என்ற விருது வாக்குடன் யாவும் இனிதே முடிவடைந்தது. எம் பங்குகளுக்கு பயணமானோம். எம் நல்ல பிதாவின் பிறந்த நாள் அர்த்தமுடன் அமைய ஒருவர் ஒருவரை வாழ்த்தினோம்.



**அருட்சகோதரி. அம்புறோசின், திருக்குடும்ப பொதுநிலையினர்**
**மன்னார், நானாட்டான், அரிப்பு**

## Our Beloved Fr.J.P.E.Selvarajah


***A Universal brother***

***And***

***Our Priest Associate***

Always "yes to our requests.

You are a 'Selvam' To us all.



Half an hour early for all functions

You are one among 1000 For your quickness & generosity

An Unofficial visitor In all our events

'You' are 'You' for All seasons

You are so different in your relationship

## A niche among the Religious

Selva enjoys an enviable niche in all the Convents and their inmates- young and old alike. He is the unofficial visitor par excellence. They need no "foreign minister" or DHL- service other than the kind services of Selva – to pass messages, to send letters, to coordinate people and what not, from that open prison Jaffna to any part of the world. You can be in Jaffna or in Timbuktu, Selva will not forget your feast day, birthday, profession day or ordination day and will not miss a funeral. He unites himself with all in prayers and feelings. A man he is, but a man for all season's and needs.

**Sr.Arul**

# மாறிவரும் உலகில் இலக்கைத் தெரிதல்

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட பசுந்தீவாம் நெடுந்தீவில் வைகாசித் திங்கள் 1ம் திகதி இத்தீவின் 4 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. திரு. விவேகானந்தா பிறேம்குமார் (இணைப்பாளர்- குடும்ப புனர்வாழ்வு அமைப்பு, யாழ்ப்பாணம்) என்பவரை வளவாளராகக் கொண்டு "இலக்கைத் தேர்ந்து தெளிதல்" எனும் தலைப்பில் இந் நிகழ்ச்சித்திட்டம் இடம் பெற்றது. காலை 9.30 மணியளவில் சிறு பஜனை செபத்துடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வானது இறையாசீரின் நம்பிக்கையுடன் வளவாளரால் முன்னெடுக்கப்பட்டது. முதல் படியாக மாணவர்களின் அறிமுகம் இடம்பெற்றது. சிறு குழுவிலுள்ள எல்லோருடைய பெயர்களும் பாடல் வடிவில் இடம் பெறத்தக்கதாக இசையமைக்கப்பட்டு மாணவர்கள் தம்மை அறிமுகம் செய்து கொண்டது மிகவும் சுவாரஸ்யம் நிறைந்ததாக இருந்தது.


இச் சிறு குழுக்களாக செயற்பட்ட சந்தர்ப்பத்தில் மாணவர்கள் எதிர்கொண்ட நன்மையான, நன்மையல்லாத விடயங்கள் என்பவற்றை பற்றி கலந்துரையாடப்பட்டது. அவ்வாறான விடயங்கள் மாணவர்களால் வெளிக்கொணரப்பட்டதன் பின் அவர்கள் வாழும் சூழமைவில் அவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் யாவும் முன்னுரிமை அடிப்படையில் பிள்ளைகளாலேயே அட்டவணைப்படுத்தப்பட்டது. இச் செயற்பாட்டில் பிள்ளைகள் 'சிறுவர் துஷ்பிரயோகம் என்னும் விடயத்தை மிக முக்கிய பிரச்சினையாக வெளிக் கொணர்ந்தனர். இதனை மேலும் ஆழமாகக் கண்டு கொள்ள (problem tree) பிரச்சினை மரம் வரையப்பட்டது. இம்மரம் வளர்ப்பதற்கான காரணங்கள் யாவும் இம்மரத்தின் வேர்களாக இருக்கின்றன என வளவாளர் மிகவும் துள்ளியமாக விளங்கவைத்தார். இதனைக் கொண்டு பிள்ளைகளே இம்மரத்தை வரைந்தனர் இதன் காய்களாக

1. மனவருத்தம்
2. உயிரிழப்பு
3. சமூகச் சீர்கேடு

4. சிறுவர் கல்வி பாதிப்பு எனவும், இதன் வேர்களாக

- ➢ சிறுவர் பாதுகாப்பின்மை
- ➢ சிறுவர்களை வேலைக்கமர்த்தல்
- ➢ தேவையற்ற தொடர்பு சாதனப் பயன்பாடு
- ➢ சிறுவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாமை.

என மாணவர்களே தமது சிந்தனைகளிலிருந்து இச் செயற்பாட்டைச் செய்தனர். பின்பு இப்பிரச்சினை மரம் முற்றாக அழிக்கப்பட வேண்டுமெனின் இதன் வேர்கள் முற்றாக வெட்டப்பட வேண்டும். இவ்வேர்களை வெட்டும் பொறுப்பும் உங்களுடையதே என வளவாளரால் தெளிய வைக்கப்பட்டது. மாணவர்களும் தமது



பொறுப்பே இது என சுயமாக கருத்துக்களை வெளிக்கொணர்ந்தனர். தொடர்ந்து மாணவர்கள் ஒவ்வொருவருடையவும் நோக்கம், இலக்குகள் தனித்தனியாக நோக்கப்பட்டது. இந்நோக்கங்கள்

Specific
Measurable
Achievable
Realistic
Time bound

எனும் நியதிக்குள் எழுதப் பட வழிப்படுத்தப ்பட்டது. பின்னர் மாணவர்கள் தமது நோக்கம், இலக்கு களையும் அவற்றை அடையக்கூடிய செயற் பாடுகளையும் எழுதினர்.

உதாரணம்: மாணவி X

நோக்கம்:- G.C.E O/L பரீட்கையில் அனைத்துப் பாடங்களிலும் ‘A’ தர சித்தி பெறுதல்.

செயற்பாடு:-
1. பிரத்தியேக வகுப்புகள்
2. கஸ்டமான பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்
3. பயிற்சிப் புத்தகங்கள்
4. மேலதிக பயிற்சிப் பரீட்சைகள்

இச் செயற்பாட்டு நிகழ்வின் இறுதியாக மாணவர்கள் ஒருவர் ஒருவரை பூரணமாக அறிந்து கொண்டதை உறுதிப்படுத்தவும், இதன் அடையாளமாக ஞாபகச் சின்னம் ஒன்றை மாணவர்கள் தம்முடன் எடுத்துச் செல்லவும் “நற்சான்றுக் கோப்பை” ஒவ்வொருவராலும் தயாரிக்கப்பட்டு ஒருவர் ஒருவருக்கு வழங்கினர். இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் மாணவர்கள் உற்சாகம், உத்வேகம், கலகலப்பு மற்றும் ஆர்வத்துடன் பங்குபற்றிப் பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.



**ஆன்மீகக் குழு**

## உலகில் திருக்குடும்பத்தின் அர்ப்பண வாழ்வு

குடும்பம் ஓர் கோவில் , குடும்பம் ஓர் ஆலயம் பல்கலைக்கழகம் என்றெல்லாம் வர்ணிக்கப்படும்போது, இன்னொரு விதமாக குடும்பம் எனக்கு ஓர் பாதுகாப்பு, ஓர் அடையாளம் என்பது மட்டுமல்லாது குடும்பம் எனக்கோர் சுமை, கட்டுப்பாடு, என் முன்னேற்றத்திற்குத் தடை என்று நினைப்பவர்களும் இன்று அதிகமாக இருக்கின்றார்கள்.

ஆடம்பர வாழ்வும் பணத்திற்கான முதலிடம் தொடர்புச் சாதனங்களின் ஆக்கிரமிப்பும், சினிமா மோகமும், போதைப்பொருள் பாவனையும் மேலோங்கியுள்ளதால் குடும்பம் என்ற கூட்டுறவு கலைந்து ஒவ்வொரு நபரும் தனித்தனியாகப் பிரிந்து எமது கலாச்சாரம் பண்பாடு சிதைக்கப்படுவதை தடுக்க முடியாத ஓர் சூழலில்தான் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் ஆண்டவருக்குள் வாழ்வு, அர்பணவாழ்வு என்பதெல்லாம் பகல் கனவாகவே தென்படுகின்ற இன்றைய சூழலில் திருக்குடும்பத்தைப் பற்றிச் சிந்திக்க ஓர் அழைப்பு.

“நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” ஆண்டவரின் அழைப்பு விசித்திரமானது. மனித மனத்தினால் உய்த்துணர முடியாதது. “என்னில் என்னத்தைக் கண்டு அவர் என்னை அழைத்தார்” என்று நாம் சிந்திப்போமானால் எம்மால் அதற்கு விடை காண்பது முடியாதிருக்கும். இந்தக்குழப்பம் தான் அன்று அன்னை மரியாளுக்கும் ஏற்பட்டது. ஆனால் தெளிவு பெற்று நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நடக்கட்டும்” என்று முழுவதுமாக தன்னைக் கையளித்ததன் மூலம் மனுக்குல மீட்பைத் தொடங்கி வைத்தார். இத் தொடக்கம் சங்கிலித்தொடர் போல் பல இன்னல்களைக் கண்டும், ஆண்டவர் அவரை எடுத்துக் கொள்ளும் வரை தொடர்ந்தது.

திருக்குடும்பத்தின் மிக முக்கிய பயனாளியான மரியன்னையின் வாழ்வில் அவர் கடைப்பிடித்த பண்புகள் எமக்கு ஓர் பெரிய சவாலாகவே இருக்கின்றன. அனைத்தையும் உள்ளத்தில் வைத்துச் சிந்தித்தார் என்று பார்க்கும் போது அவளது குடும்ப வாழ்வின் ஆரம்பத்தில், கன்னியானவள், கணவனை அறியாதவள்

கருத்தாங்கியிருக்கின்றாள். இதில் அன்னையின் தவறு என்று ஒன்றுமே இல்லை. இருந்தும் அன்னை அதனால் ஏற்பட்ட அனைத்து அவமானங்கள், துன்பங்களையும் சகித்துக் கொண்டாள். இன்று எம் மத்தியில் எமது இளம்பிள்ளைகளின் வாழ்க்கையை பார்க்கும் போது ஓர் நோக்கின்றி, இலட்சியமின்றி தமது வாழ்வை சீரழித்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு ஒழுக்கம் என்பது, "அது என்ன?" என்ற நிலைதான் இன்று உள்ளது. குடும்பங்களில் தந்தை செய்வது தாய்க்கு தெரியாது. தாய் செய்வது தந்தைக்கு தெரியாது. பெற்றோரின் சிந்தைனை, தேவை பிள்ளைகளின் தேவைகள், வாழ்வின் நிலைகள் பெற்றோருக்குத் தெரியாது. வெளிப்பகட்டும், மற்றவர்களுக்கு ஓர் குடும்பம் என்ற நடிப்புத்தான் இன்று மேலோங்கியுள்ளது.

திருக்குடும்பம் ஒருவரை புரிந்து கொண்டது மட்டுமல்லாது ஒருவருடைய மதிப்பும் மரியாதைக்கும் மற்றவர் பொறுப்பாக வாழ்ந்தார்கள். மரியன்னையின் நிலையறிந்த யோசேப் மறைவாகவே விலக்கிட நினைத்தார். நாம் காணும் உலகில் ஒரு பெண்ணின் சீரளிவுக்கு தான் காரணமாக இருந்தாலும் தானே அப் பெண்ணை தூற்றும் ஆண்களே அதிகம் உள்ளனர். ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்ட தாய்க்கு என் தந்தையின் அலுவலில் நான் ஈடுபட்டிருப்பது தெரியவில்லையா என்று மறு கேள்வி கேட்டாலும் அவர்களுடன் கூடச் சென்று பெற்றோருக்குரிய பிள்ளையாக, அன்பிலும், கரிசனையிலும் தன் பங்கை முழுமையாகக் கொடுத்தார் இயேசு. எமது குடும்பங்களில் பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்கான நம்பிக்கை குறைந்து விட்டது.

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு நேரம் இல்லை. குடும்பத்தைக் கொண்டு நடந்த ஒவ்வொருவரும் இயந்திரமாக தம்மை மாற்றிக் கொண்டுள்ளார்கள். இயந்திரத்திற்கும் தேய்மானம் இருக்கும், அதற்கும் எண்ணையும் கவனிப்பும் தேவை என்ற உள் உணர்வு கூட அருகிக் கொண்டு வரும் இந்நாளில்: சிலுவை அடியில் "அம்மா இதோ உன் மகன், நண்பா இதோ உன் தாய்" என்று தனது கடைசி நேரத்திலும் தன் தாயை நினைத்து ஒப்படைத்த இயேசுவின் தன்மை எமக்கு ஒரு சவால். வயது போய்விட்டால் எமக்கு இவர்கள்

பாரம், எமது வாழ்வுக்கு இடையூறு என்று நினைத்து ஒதுக்கும் பிள்ளைகள் தான் இன்று அதிகம்.

இவர்கள் மத்தியில் திருக்குடும்பத்தின் ஐக்கியத்தை, அதன் மகிழ்ச்சியின் அனுபவத்தை அவர்கள் பெற்றுக் கொள்ள எம்மை ஈடுபடுத்துவது என்பது எமது வாழ்வுக்கு ஓர் சவாலாகத்தான் இருக்கின்றது. கலாச்சாரச் சீரழிவு மலிந்துவிட்ட இன்றைய சூழலில் இளைஞர்களுக்கு விழப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், இயல்பாக குடும்பப் பாங்கோடு பிள்ளைகள் வளர்வதற்கும், சமூக உணர்வோடு மற்றவர்களை மதித்து அன்பு செய்து உடன் இருப்பதற்கும், திருக்குடும்பத்தின் ஆன்மீகம் எமது குடும்பங்களில் தளைத்தோங்கவும், திருக்குடும்பத்தின் வாழ்வு எமக்கு மாதிரியாக இருக்கின்றது.

மேலும் திருக்குடும்பமும் பலவிதமான சவால்கள் மத்தியில் தான் ஒருமித்து இறைசித்தத்தை நிறைவேற்றினார்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே எமது குடும்பங்களில் ஏற்படும் சவால்களையும் ஏற்றுக் கொண்டு திருக்குடும்பத்தின் அர்ப்பணத்தை வாழ்பவர்களாக மாற்ற, நாம் பணியாற்ற “நான் என்றும் உன்னோடு இருக்கின்றேன்”. என்ற இயேசுவின் வார்த்தையில் முழுநம்பிக்கை வைத்தவர்களாய் எம் அர்ப்பண வாழ்வு நிலைக்க, எம்மை அழைக்கும் இறை பாதையில் பயணிப்போம்.

**திருமட சார்பற்ற குழு**

எனது தங்கை மெக்டலீன் (தங்கை பொலிஸ்) சுகவீனமுற்று இருந்தபொழுது வீட்டிற்கும், வைத்தியசாலைக்கும் சென்று ஆறுதல் கூறி செபித்தும், நற்கருணை வழங்கி இறைவனின் அருளோடு வாழவைத்தமைக்கும் அவரை இழந்து நின்ற வேளை ஆறுதல்கூறி இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றோம். எம் சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள்.

அருட்தந்தை டானியல், அருட்சகோதரி லியோ இவர்கள் பெயராலும் நன்றி கூறுகின்றேன்.

**அருட்சகோதரி சிப்ரியன்**

# தத்தி தத்தி நடை பயிலும்



புதுக்குடியிருப்பு - திருக்குடும்ப கன்னியர் மடம் இவ்வருடம் ஆனது 25வது ஆண்டு விழாவை மனமகிழ்வோடு நினைவு கூருகிறது அதன் நினைவாகவும். மழலைகள், பாடசாலை சிறுவர்கள் இளையோர் பெரியோர் என அனைவரும் மனம் விட்டு மகிழ்ந்து உறவாட திருக்குடும்ப சகோதரிகளால் புதுக்குடியிருப்பு திறந்து வைக்கப்பட்ட “மகிழ் பூங்கா” திறப்பு விழாவில் கூறப்பட்ட கவிதை இது

தத்தி தத்தி நடை பயிலும் தங்க மழலைகளுக்கு அழகிய பூங்கா
கொஞ்சி கொஞ்சி குலாவும் குட்டிக் குழந்தைகட்கு
குதித்து விளையாட ஒரு பூங்கா
அன்னம் போல் நடை பயின்று
அன்னையுடன் இணைந்து
ஆனந்தக்கூத்தாட ஒரு பூங்கா
வீர நடை நடந்து தந்தையின் கரம் பிடித்து
சக்கரத்தில் சுற்றி விளையாட
வண்ண மலர்களுக்கு வடிவான பூங்கா

போருக்குப் பின் இறைவனின் சொத்துக்கள் நீங்கள்.
எம் இனத்தின் முத்துக்கள் நீங்கள்
குடும்பத்தின் குன்றாத மணிக்கம் நீங்கள்
உங்களை வளர்த்தெடுப்பது எமது பொறுப்பு
உங்களுக்கு இருக்கும் போரின் வடுக்களை அகற்ற
இப்பூங்கா இனிய மருந்து
ஓடி விளையாட வாருங்கள்

உருக்குலைந்த சமூகத்திற்கு உயிர் கொடுக்க
உறுதியுடன் இங்கே வாருங்கள்.
சிதைத்து விட்ட எம் குடும்பங்களை சீரழிய விடாமல்
சிந்தித்து செயற்பட இங்கே வாருங்கள்

போரின் வடுக்களினால் ஏற்பட்ட காயங்கள்
பொழுது சாயுமுன்னே குணமாக்க இங்கே வாருங்கள்
உங்கள் மழலைகள் பனித்துளி நிறைந்த மொட்டுக்கள்
இந்தப் பூமியில் தடம் பதித்து மகிழ்ந்து விளையாடும் போது
உங்கள் மனக் காயங்கள் ஆறும்
குழந்தைகட்கு மட்டுமல்ல இப்பூங்கா
அமைதியில் இருந்து இளைப்பாற பெரியோரும் இங்கே வாருங்கள்

குடும்பத் தலைவன் தலைவியாக மனம் விட்டு
மகிழ்ந்து உறவாட இங்கே வாருங்கள்
மகிழ்ச்சியான இசை கேட்டு மனமகிழ்வு கொள்ளுங்கள்
குழலினது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்
கூடிக் குதூகளிக்கும் குழந்தைகளின்
இனிமை நிறைந்த மழலை இசையை
எங்குமே எம்மால் கேட்க முடியாது
அனுபவமே வாழ்க்கைப் பாடம்
ஏணியில் ஏறிடுவோம் எட்டி உதைத்திடுவோம்
சக்கரம் சுற்றிடுவோம் சறுக்கி விழுந்திடுவோம்
ஊஞ்சல் ஆடிடுவோம் ஊர்ப் பெருமை பேசிடுவோம்
வன்னி மண் பெற்றெடுத்த குழந்தைகள் நாம்
வீர மறவர் வழிவந்த குலக்கொழுந்துகள் நாம்
வாழ்க்கைப் பாடத்தை இங்கே கற்றிடுவோம்
தம்பி தங்கை விளையாட வாருங்கள்
அம்மா அப்பா எம்மை அழைத்து வாருங்கள்
அண்ணா அக்கா அமைதி தேடி வாருங்கள்
தாத்தா பாட்டி எங்களுடன் மகிழ வாருங்கள்
வாழ்க புதுக்குடியிருப்பு
வளர்க சிறுவர் பூங்கா

**அருட்சகோதரி. யசோதா**





## வாழ்வின் முதுமையை அருளுடன் எதிர்நோக்கல் அனுபவப் பகிர்வு

### வாழ்வும் சாவும் இறைவனே

எனது விரக்தியும் என்னை நான் ஏற்றுக்கொள்ளாமையும் அக விடுதலையற்ற நிலையைச் சுட்டிக் காட்டுகின்றது. நான் என்னை அறிந்து புரிந்து கொள்ளும் போதுதான் அக விடுதலையடையலாம். தன்னறிவில்லாமல் ஒருவிதமான ஆன்மீகமும் இல்லை. நாம் முகமூடியோடு மற்றவர்களைப் பார்ப்பது எமது குழு வாழ்விற்குக் கஷ்ரமானது. இப்படியான எனது வாழ்க்கைப் போராட்டத்தில், நான் விரைவில் சாக வேண்டும், இறைவன் என்னை எடுத்துவிட வேண்டுமென்ற எண்ணமும் தோன்றலாம்.

இறைவன் எமக்குத் தந்த வாழ்விற்கு நன்றி கூறும் காலம் இது. இக்காலத்தில் இறைதியானத்தில் அவரை என்றும் சுவைப்போம். அமைதியில் அவருடன் உரையாடுவோம். அப்போதுதான் இறைவன் என்னுடன் பேசுவார். வாழ்வும் சாவும் ஒன்றாகும் போது எம் உள்ளத்தில் சமாதானத்தைக் கொண்டு வாழ்வோம்.

***அருட்சகோதரி மேரி அனஸ்ரேசியா***

### நான் யார்?

"தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை"
என்பது பழமொழி.
நம் அன்னை, இதோ ஆண்டவரின் அடிமை
"உம்முடைய வார்த்தையின் படியே ஆகட்டும்"
என்று தன்னை அர்ப்பணித்தவர்.
தேவையில் இருந்த எலிசபேத்,
கானாவில் கலியான வீட்டுக் காரருக்கு
உதவிட முன்வந்தவர்.
தச்சன் சூசையின் மனைவியாக, ஏழைக் குடும்பப் பெண்ணாக,
அடக்கமுடன் வாழ்ந்தவர்.
இயேசுவின் செயல்களை
உள்ளத்தில் வைத்துச் சிந்தித்தவர்.
ஆண்டவரின் அருஞ்செயல்களைப் புகழ்ந்து பாடினார்
மனித அவதாரச் செய்தியை மனதில் இருத்தினார்.

**தாயைப் போல் பிள்ளையா நான்?**

**சிந்தனை சிறகடித்தது**

**அருட்சகோதரி மேரி எட்விச்**

இத்தியானம் என் வாழ்வுப்பாதையில் இறை பிரசன்னத்தின் ஆழ்நிலைத்திருத்தலிலும், என்னை உய்த்துணர்ந்து வாழ அழைக்கின்றது. கிறிஸ்துவின் பாதையில் அவரின் பிரசன்னத்தில் ஆழமான ஆன்மீகத்தை கண்டுணர்ந்து இன்னும் இருக்கும் காலத்தில் எதை எதை வெறுக்க வேண்டும் எதை அன்புடன் அரவணைத்து அயலவர்க்கும் நன்மை செய்து ஆன்மீக ஒன்றிப்புக்கு ஆயத்தம் செய்ய ஊக்குவிக்கும் ஓர் நல்ல காலமாக அமைந்தது.

**Sr. M. Wilfred**

"ஆழமான மௌனத்தில் இருக்கும் போது எமக்கு எம்மைப்பற்றிய ஒரு தேடல் வரும் "ஆழ்நிலை தியானத்தின் மூலம் நான் என்னை வெறுமையாக்கி, உலகப்பற்றுதல்களில் இருந்து விலகி, அகவிடுதலை பெற்று, ஆன்மீகத்தை வளர்த்து, புனிதமாக வாழ்ந்து, ஆண்டவருடன் ஒன்றித்து மரணிக்கும் அனுபவத்தை பெற்றுக் கொண்டேன்.

**Sr. M. Julia**

"எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகளே. வலிமை மிகுந்தோருக்கு எண்பது. அவற்றில் பெருமைக்கு உரியன துன்பமும், துயரமுமே அவை விரைவில் கடந்து விடுகின்றன"

இழப்பிற்கு வருந்தி விடுதலை கொடுத்து, நிகழ்காலத்தில் எம்மை வெறுமையாக்கி வாழ இறைவனுடன் ஒன்றித்து மனஅமைதி, மகிழ்ச்சி பெற ஆழ்நிலைத்தியானம் உதவுகின்றது.

நான் செய்ய வேண்டியவற்றை, பின்போடாமல் இப்போதே செய்ய ஊதாரி மைந்தன் மூலம் கற்றுக்கொண்டேன். இறைவன் தந்த வாழ்விற்கு நன்றி கூறுவதிலும் முகமூடிகளை களைந்து விட்டு நான் நானாக வாழவும், அனைத்திற்கும் "பிரியாவிடை" சொல்லவும் அதனால் என்னிடம் வளரும் ஞானம் என்னையும் பிறரையும் வழிநடத்தவும் என் அகப்பயண வாழ்வில் தேடல் நிலையில் இறைவனைக் கண்டு மன அமைதியுடன் வாழவும், சாவும் ஒன்றிணைய என் எஞ்சிய நாட்களை செலவிட தீர்மானித்துள்ளேன்.

**Sr. Benignus**

இந்த வயது இறைவனுடைய ஒரு கொடை. எல்லாவற்றிலும் அழகை அனுபவிக்க, முகமூடிகளை கழற்றி விட்டு உண்மை நிலையில் வாழ, கவலைகளை மறந்து கிறீஸ்துவுக்குள் வாழ்வைத் தொடர, முயற்சி எடுக்க, ஒப்பிட்டு பார்க்காது இறையருளுடன் இணைந்து செபத்தில் வளர அகவிடுதலை அவசியம்.

தன் உணர்வு தான் ஆன்மீகத்தில் ஆரம்பம். இதில் வளர பெரிய தடையாக இருப்பது சுயம். தடைகளைத் தாண்டி அகத்தில் உறையும் இறைவனை சந்தித்து, அவர் குரல் கேட்டு அவருடன் இருந்து இறை ஒன்றிப்பில் வளர்வோம்.

பிரபஞ்சத்தில் இறைவனுடைய திட்டம் உள்ளது. இதில் எம் பொறுப்பை உணர்வோம். நாம் எம்முடனும், இறைவனுடனும், மனித குலத்துடனும் பிரபஞ்சத்துடனும் ஒருங்கிணைப்பில் வாழ பரிசுத்த தந்தை அழைக்கின்றார். பிரபஞ்சத்தை அழிவிலிருந்து காப்பாற்ற, சிந்தித்து செயற்படுவோம்.

**Sr. M. Dunston**




# What am I searching?

Jesus asked “what are you looking for? where do you live master they asked. Jesus answered come and see.

The 14th August was a very important day in my life’s journey, because the Almighty Lord showered His blessings upon me. It was really God’s blessings that He called me to follow him, through the Holy Family Institute. I always thank my Lord with grateful heart.

We had a retreat at Wennapuwa on 5th -11th August. During my retreat I was touched by the reflection which I received from Sr.Aquinas Cyril. What am I searching? This question made me to reflect more about my commitment. In this moment of discernment I need to reflect deeply. During my search I recognized that I am searching for ‘real happiness’. First I searched for my happiness in the ‘relationship and in the worldly things’.




These are the things I have been searching for the past 24 years. Finally I realized during my retreat that God is calling me to let go of everything to posses “God Alone” as my real happiness. I experienced the real happiness in Jesus Christ. I decided to continue my search in Him. With our open heart and mind I committed myself totally to God who called me to experience real and meaning happiness in Him alone who is the root and source of all joy and happiness.

***Sr. Subajini Sebamalai***

# We too ….Exchange

The ARK –it's our home at Uduvil. Started in 1978, this home cares for the children with special needs.

At present, there are forty four children between the ages of 07-14, among whom thirty are accommodated in the hostel. Others are brought by their parents /guardians in the morning and leave in the evening. We have program of studies and activities according to their abilities.

This year the Sunera Foundation that helps children with special needs in Sri Lanka proposed a program called 'Beyond Borders' that would be an initial step to exchange the life and activities of these children in our land. The Ark also is connected to Sunera Foundation through the co-ordination of the Centre for Performing Arts in Jaffna. The proposal came from the President of Sunera Foundation Ms. Sunethra Bandaranayeke and we too happily consented.

It was planned to start with the members of the Ark in Jaffna and the group from Anuradhapura which is the closest district to Jaffna. It was organized and funded by Sunera Foundation for three weeks in Jaffna and three weeks in Anuradhapura.

The first group comprising three trainers and eight members of special needs from Anuradhapura arrived at The Ark on 31.05.2015. They were about twenty years of age from different places in Anuradhapura district. From the Ark three trainers including one of our sisters and eight children (4 girls &4 boys) participated in it.

It started with a moderate welcome to the coordinators, trainers and participants and the program went on for three weeks at The Ark. It was residential. On free days, they went together to visit some places in Jaffna .It was altogether a mixed group of Budhists, speaking Sinhala language and Catholics and Hindus speaking Tamil language. Some trainers had already met before. The medium of language, we could say ….was love. They really proved they were differently able.

Daily they had their activities, therapies, music, dance, drama, games etc that provided opportunities to communicate to

each other and be one. The children were very naughty at times but the trainers were very gently handling them and giving them guidance through translation when needed. They enjoyed Jaffna dishes well and were quite free. At the end of the third week, they performed a program at the Centre for Performing Arts for the public. Both the cultures were exhibited. It was very much appreciated by all including parents, students, seminarians, priests and nuns. Some newspapers gave publicity to it. Next day was a free day for them to cook and enjoy together. Then came the final day to wish good-bye. They left each other in tears with the hope that they would meet again in Anuradhapura.



After a gap of one week, our group of eleven went to Anuradhapura and both the groups met again. They were accommodated at Sarvodhaya building. They went through the same training and activities daily. They were taken out to see some places. All were very well looked after and their life experiences were rich. Towards the end they had the same program staged at Co-op city Auditorium in the town for the parents, well-wishers and those who were really interested in their welfare. Our honorable Chief Guest was Ms. Sunethra Bandaranayake who is the President of this Foundation. The program was well applauded and we could see some in tears looking at their children, young boys and girls on the stage participating in dances and drama. Among them some on their wheel chairs, some cannot speak including the main actor in thedrama and some cannot walk or speak properly. But their expressions and gestures were more powerful than words. The trainers devoted themselves fully to work

with them. Love energy was the life wire connecting them all. Parting was terribly difficult. Even the parents, trainers, care-takers and visitors too were very much touched. It was a loving farewell.



On the whole, the living and sharing together in both the places gave them an opportunity of being human in a different way. Even though they belong to different religions and cultures, the Morning Prayer and assembly was common to all. They became quite aware and sensitive to the needs of others and responded warmly without words. They brought out their hidden talents beautifully. Some were able to come out of their shyness and came forward with self-confidence on the stage. There was no difference. All felt accepted.

In a land which is shattered by violence and war, they proved the ultimate energy is Love who is God.

They tell the world that they too ……can exchange.

Our gratitude goes to Sunera Foundation and its dedicated members not only for their financial assistance but above all for their initiative, interest, encouragement and concern towards these children Glory to God Alone.

**The Ark Family,**
**Uduvil.**

## மனிதர் பற்றிய கூற்று தவறக்கூடாது

### சிறிய கதை

அந்த வீட்டில் அந்த சிறுமி சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு தனது இரு கரங்களில் அப்பிள் பழங்களை வைத்துக்கொண்டு மாறி மாறி அவற்றையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அச்சிறுமியின் தாய், “நீ இரண்டு அப்பிள் வைத்திருக்கின்றாய் எனக்கு ஒன்று கொடு” என்றார். ஒரு வினாடி தன் தாயைப் பார்த்த அச்சிறுமி, உடனே ஓர் அப்பிளைக் கடித்தார். அடுத்ததாக இரண்டாவது அப்பிளையும் கடித்துவிட்டார். தாயின் முகத்தில் இருந்த சிரிப்பு உறைந்து போனது. தன் மகள் மீது கோபம் வந்தது. தனது மகள் இவ்வளது சுயநலத்தோடு இருக்கின்றாளே என்று வருந்தினாள் தாய். தனக்கு ஒரு அப்பிளையாவது அல்லது அதில் ஒரு பாதியையாவது மகள் தருவாள் என்று எதிர்பார்த்தாள். தான் கேட்டவுடன் தனது செல்லமகள் இரண்டு அப்பிள்களையும் உடனே கடித்து விட்டதால் அடைந்த ஏமாற்றத்தை வெளிப்படுத்த முடியாமல் தவித்தாள் தாய். ஆனால் அச்சிறுமி தாயிடம் “அம்மா இந்த அப்பிள்தான் இனிப்பாக இருக்கு… நீங்க இதை எடுத்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லி இனிப்பான அப்பிளைத் தாயிடம் கொடுத்தாள். இரு அப்பிள்களை வைத்து தனது தாய்க்கு நல்லதொரு பாடத்தை சொல்லி விட்டார் சிறுமி.

அன்பர்களே ஒருவருக்கு அறிவும் அனுபவமும் அதிகமாகவே இருக்கலாம். ஆனால் ஒருவரைப் பற்றிக் கணிப்பதை உடனடியாக சற்று தள்ளிப்போட வேண்டும். மனக்கணக்கு தவறலாம் ஆனால் மனிதரைப் பற்றிய கணக்கு தவறக் கூடாது.

**ஆதாரம்: மனிதன் - வத்திக்கான் வானொலி**

அன்பான உறவுகளே!!

எமது தகவற் சேவைக்கென நீங்கள் அனுப்பிய ஆக்கங்கள், ஒத்துழைப்புகளுக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எம் சபையின் ஐந்து கிளைகளின் அனுபவ ஆக்கங்களை ஒன்றாகத் தாங்கி வெளியாகின்ற 'குடும்ப உறவின் சங்கமம்' பற்றிய உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்கள் ஆலோசனைகள், ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

அடுத்த சங்கம இதழுக்கான உங்கள் படைப்புக்களை **30.10.2015** இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் படைப்புக்கள் பின்வரும் கருப்பொருளின் மையமாக அமையட்டும்.

**மனித அவதாரத்தில் மனித மாண்பு**

- இன்றைய உலகில் மனித மாண்பு
- அர்ப்பணமும் மனித மாண்பும்

**உங்கள் தொடர்புகளை விரைவாக்கி, எமது சேவையை இலகுவாக்குங்கள்:**

மின்னஞ்சல் முகவரி:

**sangamuminfo@gmail.com**